# இரட்சிப்பு ஆகஸ்டு 2026 யுனிகோடு



## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2026ம் ஆண்டின் 8வது மாதத்திற்குள் நம்மை வழிநடத்திய நம் வேந்தாதி வேந்தர் இயேசுவின் பாதம், பணிந்து தொழுவோம். இம்மாதம் 6ம் தேதி நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுரூபமான திருநாள் (THE TRANSFIGURATION OF THE LORD - FEAST DAY), 15ம் தேதி இந்திய சுதந்திர தினம் (THE INDEPENDENCE DAY OF INDIA), 24ம் தேதி அப்போஸ்தலனாகிய தூய. பர்தொலமேயுவின் திருநாள் (FEAST DAY OF ST. BARTHOLOMEW, THE APOSTLE), 29ம் தேதி பரி.யோவான் ஸ்நானனின் நினைவுநாள் (THE PASSION OF ST. JOHN THE BAPTIST - MEMORIAL DAY) ஆகிய திருநாட்களை ஆசரிக்கிறோம். இந்த திருநாட்களை ஜெபத்துடன் ஆசரித்து, ஆசீர்வாதம் பெற உங்களை அன்புடன் நினைவுபடுத்துகிறோம்.

ஜெப-ஜன்னல்-PWPM, வேதாகம-போட்டிகள்-RBCS, அனைவரும்-ஊழியத்தில்-AIMS ஆகிய திட்டங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியம், புத்தக வெளியீட்டு ஊழியம், வலைதள ஊழியம் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஊழியம், 'நல்ல-விதைகள்' கைப்பிரதி ஊழியம், NMS மிஷனரி ஊழியம், திருச்சபை ஊழியம் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள், காணிக்கைகள் அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பவும். தகவல் தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI மற்றும் QR CODE ஆகியவை இப்பத்திரிக்கையின் 18வது பக்கத்திலும், நமது வலைதளத்திலும் உள்ளன. கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

# இரட்சிப்பு இணைத் திருமறை

## (தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு)

வேத-வரிகள்-186 ஆகஸ்டு 2026 சங்கீதம்-147:16

சத்திய வேதம் (ரேனியஸ்-1840)
கர்த்தர் **பஞ்சடைவாக உறைந்த மழை**யைத் தந்து; சாம்பலடைவாக உறைந்த பனியைத் தூவுகிறார்.

பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)
கர்த்தர் **பஞ்சைப் போல் உறைந்த மழை**யைத் தருகிறார்; சாம்பலைப் போல உறைந்த பனியைத் தூவுகிறார்.

திருவிவிலியம் (பொது-1995)
கர்த்தர் **வெண்கம்பளி போல் பனியைப்** பொழியச் செய்கிறார்; சாம்பலைப்போல் உறைபனியைத் தூவுகிறார்.

பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)
தேவன் **கம்பளிபோல் வெண்மையான பனியை** விழப்பண்ணுகிறார். உறைந்த பனியை காற்றினூடே தூசியைப்போல் வீசச்செய்கிறார்.

---

# ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - ஆகஸ்டு 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... அமெரிக்கா-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர்கள் நிறுத்தப்பட... இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தங்கள் மதிக்கப்பட... தெற்கு-ஆசிய நாடுகளின் பொருளாதாரம் சீரடைய... உலகம் முழுதும் எரிபொருள் விநியோகம் சீரடைய...

2) இந்தியாவில் மதப்-பிரிவினைவாத சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மை மக்கள் மீதான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக மற்றும் அரசியல்-சாசன நெறிமுறைகளை மதித்து நடக்க... இந்தியாவில் போராடும் மக்களுக்கும் மாணவர்களுக்கும் நல்ல தீர்வு கிடைக்க...

3) தமிழ்நாட்டு மக்களின் ஒற்றுமை வாழ்வுக்காக... தமிழ்நாட்டில் தொழில்கள்-வியாபாரம் செழிக்க... மத-வாத, அடிப்படை-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட... தமிழ்நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்காக... புதிய அரசு மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைய...

4) திரு.ஜோயன்ஸ் அவர்களின் இரட்சிப்பு மற்றும் ஆவியின் அபிஷேகத்துக்காக... திருமதி. சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5) திருமதி ஜேனிஸ், திருமதி சுமி ஜேஸ்மின், திருமதி மெர்லின், திருமதி பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி வைலட், திருமதி சுதா, திருமதி பிரியா சுதிர், திருமதி.புஷ்பாவதி, திருமதி.ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6) செல்வி.டிரிசியா லவ்ஸ்லி அவர்களின் நன்றி-பலி: திருமண நிச்சயதார்த்தத்தை கடவுள் தமது பிரசன்னத்தில் சிறப்பாக நடத்திக்கொடுத்தார்; கடவுளுக்கு நன்றி பலிகளை ஏறெடுப்போம். டிரிசியா அவர்களின் ஜெப-விண்ணப்பம்: அவர்களது திருமணம் மற்றும் ஆசீர்வாதமான குடும்ப வாழ்வுக்காக...

7) திருமதி.சாரா பிரவீன் அவர்களுக்கு பாதுகாப்பான பிரசவத்தில் கர்த்தர் தந்த அருமையான ஆண் குழந்தைக்காக... தாய்-சேய் சுக-பெல-ஜீவனுக்காக...

8) பிரி கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை பயிலும் நம் பிள்ளைகளின் ஞானத்துக்காக... ஜெ.ஃப்ரி S. ஆரோன், ஜே.ஃபியா S. அன்னா, ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், பிரியங்கா, ஷாலோம் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

9) பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகளின் ஞானத்துக்காக... சிவா, கிளாட்சன், பார்வதி, பிரேம், ஜாஸ்மின், சிப்ரா, ஷி.ஃபியா, ஷெரின் டேவிட், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

10) திரு.செல்வராஜ், சகோ.சவேரியம்மாள், திருமதி.ஈவ்லின்USA, திருமதி.செல்வி, திருமதி. ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.லீலா டேவிட், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல், திரு.சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன், திருமதி.மல்லிகா ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

11) திருமதி.ராஜேஷ்வரி, Dr.ஷீபா, திரு.ஜெபனேசர், திருமதி.ஐரீன் வாக்கர், திருமதி.ஞானம் ஜெபராஜ், திருமதி.ஜலீன் செல்லத்துரை, திருமதி.வசந்தா அன்பன், திருமதி.சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

12) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி.தீபா மெர்ஸி கிறிஸ்டோபர், திருமதி.ஐரீன் வாக்கர், திருமதி.ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு.S.J.P.ராஜா, திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோரின் குடும்பங்களுக்காக...

===========================================================================

தேவசெய்தி......

# விடுவிக்கும் ஆண்டவர்



ஆண்டவர் பார்வையற்றோரின் கண்களைத் திறக்கின்றார் தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார் நீதிமான்களிடம் அன்பு கொண்டுள்ளார்.”
திரு.பா (சங்).146:8

## THE LORD WHO DELIVERS

Rev. C. Samuel Jebakumar, Presbyter & Chairman, CSI Porur Pastorate, (Diocese of Madras), Porur, Chennai - 116. South India

ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்! கடந்த மாதம் முழுவதும் நம்மை பாதுகாத்து, ஆசீர்வதித்த ஆண்டவர் இந்த புதிய மாதத்திலும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்த சித்தம் உடையவராக இருக்கிறார். ஆகஸ்டு மாதம் என்றவுடன் நம் நினைவுக்கு வருவது இந்தியாவின் விடுதலைத் திருநாள் (சுதந்திர தினம்) தான். எனவே, விடுதலை வாழ்வு குறித்த கருத்தை மையமாகக்கொண்ட 146வது திருப்பாடலின் 8வது திருமொழியை ஆதாரமாகக்கொண்டு சற்றுநேரம் தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

*“ஆண்டவர் பார்வையற்றோரின் கண்களைத் திறக்கின்றார்; தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார்; நீதிமான்களிடம் அன்பு கொண்டுள்ளார். (சங்).திரு.பா.146:8.*

இந்த திருவசனத்தை இந்த மாதத்தின் இறைவார்த்தையாக பெற்றுக்கொண்டு ஆசீர்வாதம் பெற உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.

சங்கீதம்-146 என்பது ஒரு ‘அல்லேலூயா சங்கீதம்’ ஆகும். **‘அல்லேலுயா| என்ற துதி-ஒலியில் தொடங்கி ‘அல்லேலுயா’ என்ற துதி-ஒலியில் முடியும் சங்கீதங்கள் ‘அல்லேலூயா சங்கீதங்கள்’ என்று அழைக்கப்படுகின்றன**. சங்கீத புத்தகம் நூலில் உள்ள கடைசி ஐந்து ‘அல்லேலுயா’ சங்கீதங்களில் இச்சங்கீதம், முதலாவது ஆகும். இந்த ஐந்து சங்கீதங்களிலும் தொடக்கத்திலும் முடிவிலும் ‘அல்லேலுயா’ இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 146-வது திருப்பாடல் என்பது பாபிலோனிய சிறையிருபுக்குப் பிறகு எழுதப்பட்டிருக்கலாம் எனவும், அந்த காலகட்டத்தில் இருந்த அரசியலின் நிலையற்ற தன்மையால் மக்கள் பல்வேறு கடினப்பாடுb களையும், சிக்கல்களையும் சந்தித்தனர் எனவும் திருமறை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இத்தகையதான ஒரு சூழலில், மக்களுக்குக் கிடைக்கும் விடுதலையைக் குறித்து விளக்கும் வசனமாக இவ்வசனம் அமைந்துள்ளது.

### 1. ஆன்மீக விடுதலை: SPIRITUAL FREEDOM

இந்த சங்கீதம் நன்றி மற்றும் புகழ்ச்சி பாடலாக அமைந்துள்ளது. இதன் 8வது வசனத்தின் முதல் பகுதி, ‘ஆண்டவர், பார்வையற்றோரின் கண்களைத் திறக்கின்றார்’ என சொல்லுகிறது. திருமறை

யில் 'பார்வையற்றோர்' என குறிப்பிடப்பட்டுள்ளது வெறும் உடல்ரீதியான பார்வையற்ற நிலையை மட்டுமல்லாமல், ஆன்மீக பார்வையற்ற நிலைமையும் குறிப்பதாக உள்ளது. இஸ்ரயேல் மக்கள் அனுபவித்த பல்வேறு அடிமைத்தனங்களும், துன்பங்களும், உபத்திரவங்களும், போராட்டங்களும் அவர்;களின் ஆன்மீக பார்றையற்ற நிலையால்தான் ஏற்பட்டது. யாவே கடவுளை விட்டுவிட்டு வேற்று தெய்வங்கள் பின்னே அவர்கள் சென்றதே இதற்குக் காரணம். இன்றைய சுதந்திர இந்தியாவிலும், மக்கள் பல்வேறு குருட்டுத்தனங்களை (கண்மூடித்தனமான மூடப் பழக்கவழக்கங்கள்) நம்பி குருடர்களாக உள்ளனர். ஆனால் ஆண்டவர் இந்நிலையிலிருந்து மக்களுக்கு விடுதலை தருகிறார். நாமும் கூட, கடவுளின் இருப்பு நிலையையும், அவருடைய விடுவிக்கும் ஆற்றலையும் உணர்ந்தவர்களாக கடவுள் தரும் உண்மையான ஆன்மீக விடுதலையை பெற்றுக்கொள்ள நம்மை அர்ப்பணிப்பதற்கு அழைக்கப்படுகிறோம்.

### 2. சமூக விடுதலை: SOCIAL FREEDOM

இந்த வசனத்தின் (வசனம்-8) அடுத்த பகுதி, 'ஆண்டவர் தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார்' எனச் சொல்லுகிறது. அன்றைய யூத சமூகத்தில் பல்வேறு தரப்பிலான மக்கள் பல்வேறு நிலைகளில் பாதிப்புக்குள்ளாகி ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டனர். பலர், சமூக பொருளாதார காரணங்களால் தாழ்வானவர்களாக கருதப்பட்டனர். இன்றைய 79 ஆண்டு கால சுதந்திர இந்தியாவிலும், பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு தரப்பிலான மக்கள், நெருக்குதல்களுக்கு உள்ளாகி, தாழ்வு நிலைகளில் வாழவேண்டிய நிலை உள்ளது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அத்தகைய மக்களை விடுவித்து உயர்த்த வல்லவராக இருக்கிறார். ஆங்கிலத் திருமறையில் 'LIFT' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது; அதனை, 'தூக்கிவிடுதல்' எனவும் புரிந்துக்கொள்ளலாம். இன்று நம்முடைய வாழ்வை நாம் முழுமையாக கடவுளின் கரங்களில் அர்ப்பணிக்கும்போது, அவர் நம்மையும் சமூகத்தின் தாழ்வான நிலைகளிலிருந்து தூக்கி எடுக்க அல்லது உயர்த்த வல்லவராய் இருக்கிறார். இதைத் தெளிவுபடுத்தும் விதமாகவே, நாசரேத் பிரகடனத்தில் இயேசு,

*"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்." (லூக்.4:18,19)*

என்ற தீர்க்கத்தரிசன வசனத்தை வாசித்ததோடு, *"இந்த வேதவாக்கியம் இன்றயத்தினம் நிறைவேறிற்று" (லூக்.4:21)* என்று சொல்லியிருக்கிறார்.

### 3. அன்பின் விடுதலை: LOVABLE FREEDOM

சங்.146:8 வசனத்தின் கடைசி பகுதி, 'ஆண்டவர் நீதிமான்களில் அன்பு கொண்டுள்ளார்' எனச் சொல்லுகிறது. இதில் இரண்டு கூறுபாடுகள் உள்ளன, ஒன்று 'நீதிமான்கள்' மற்றது 'கடவுளின் அன்பு'. பல்வேது சமூக அநீதிகள் நிறைந்த இவ்வுலகில், நீதிமானாய் வாழ்வது என்பது எளிதான ஒரு காரியம் அல்ல. கடவுளின் பார்வையில் நீதிமான் என்பவர், கடவுளின் விருப்பம் அதாவது கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுபவர் ஆவார். அப்படிபட்ட மக்கள் மீதே, ஆண்டவர் அன்பு கூருகிறவராக இருக்கிறார். கடவுளின் அன்பு என்பது, கடவுளின் கரிசனையையும், உறவையும் அவற்றின் வழியாய் கிடைக்கும் அனைத்து ஆசீர்வாதங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது.

தீமைகள் நிறைந்த இந்த உலகில் கடவுளின் அன்பானது நீதிமான்களுக்கு அரணாக இருந்து விடுதலையை வழங்குகிறது. நாமும் நீதியுள்ள வாழ்வு வாழும்போது கடவுள் நம்மீதான தம் கோபத்தை விலக்கி நம்மில் அன்பு செலுத்துவார் நாமும் விடுவிக்கப்படுவோம் என்பதைத் திருமறை பின்வருமாறு சொல்லுகிறது.

*"இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோம.5:9).*

மட்டுமல்ல, கடவுள் மக்கள் மீது அன்புகொண்டிருப்பதாலேயே அவர்களை விடுவிக்கிறார்; என்பதை கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு அளித்த விடுதலை வழியாய் திருமறை பின்வருமாறு விவரிக்கிறது:

*"கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்பதினாலும்; அவர் அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக்கொண்டார்." (உபா.7:8)*

அன்பானவர்களே! நாட்டின் 79-ஆம் ஆண்டு விடுதலைத் திருநாளைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், கடவுளின் பார்வையில் நீதிமான்களாக வாழ்ந்து, அவர் தரும் ஆன்மீக விடுதலை, சமூக விடுதலை மற்றும் அன்பின் விடுதலையை பெற்றுக்கொண்டவர்களாக வாழ நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்

அருட்திரு. செ. சாமுவேல் ஜெபக்குமார், ஆயர் மற்றும் குருசேகரத் தலைவர்,
தெ.இ.தி. போரூர் குருசேகரம் (சென்னை பேராயம்), போரூர், சென்னை, தென்னிந்தியா.

===============================================================================

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - **Good Tidings Bible-Prints Ministries**

# 'நல்ல விதைகள்' சுவிசேஷ கைப்பிரதிகள்

'GOOD SEEDS' GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி (ONE BATCH) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். BATCH SPONSORSHIP செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

===============================================================================

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-111 ஆகஸ்டு 2026 எப்பிசோடு-111

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**முன்னுரை:**

ஒரு ஞாயிறு பள்ளியில் ஆசிரியர் ஒரு சிறுவனிடம் கேட்டார்: நன்றியுணர்வு என்றால் என்ன? என்று. அதற்கு அந்தச் சிறுவன், கடவுள் செய்த நன்மைகளை, பின்னாட்களிலும் மறக்காமல் நினைவில் வைத்திருப்பதே நன்றியுணர்வு. என அழகாகப் பதிலளித்தான். அதுவே இந்த சங்கீதத்தின் மையச் செய்தி. நாம் கடவுள் செய்த நன்மைகள், அவர் தந்த பாதுகாப்பு, அவர் அளித்த மன்னிப்பு, சிலுவையில் நமக்காக அவர் செய்த மீட்பு ஆகியவற்றை மறந்துவிடுகிறோம். இந்த சங்கீதம் ஒரு நினைவுகூரும் சங்கீதம். இது நாம் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கவும், ஆண்டவரைத் துதிக்கவும் நம்மை அழைக்கிறது.

**1. ஆண்டவரைத் துதியுங்கள் (வசனங்கள் 1-3)**

*“அல்லேலூயா! நேர்மையாளரின் சபையிலும், திரளிலும் முழு உள்ளத்தோடு ஆண்டவருக்கு நன்றி கூறுவேன்” (வச-1).*

சங்கீதக்காரர், “எல்லாம் நன்றாக நடந்தால் நான் துதிப்பேன்| என்று கூறவில்லை. ‘முழு உள்ளத்தோடு துதிப்பேன்’ என்று கூறுகிறார். உண்மையான துதி சூழ்நிலையைப் பொறுத்ததல்ல, அது கடவுளின் மாறாத குணத்தைப் பொறுத்தது. தாவீது குகையில் இருந்த போதும் கடவுளைப் பாடினார். பவுலும் சீலாவும் சிறையில் இருந்தபோதும் இறைவனைத் துதித்தார்கள் (அப்.16:25). யோபு சகலத்தையும் இழந்தபோதும்,

*“ஆண்டவருடைய பெயர் போற்றப்படுவதாக!” (யோபு.1:21) என்றார்.*

*ஆபகூக், “அத்திமரம் தளிர்க்காவிட்டாலும்... நான் ஆண்டவரில் மகிழ்வேன். (ஆப.3:17,18) என்றார்.*

பெருங்காற்றில் சிக்கிய இரண்டு பறவைகளில் ஒன்று மகிழ்ச்சியுடன் பாடியதாம், உடனே மற்ற பறவை, ‘புயல் வரப்போகிறது. ஏன் பாடுகிறாய்?’ என்று கேட்டதாம். அதற்கு முதல் பறவை, “இந்தப் புயலை உண்டாக்கியவரை நான் அறிவேன் ஆகவே, எனக்குப் பயமில்லை” என்று கூறியதாம். இவ்வாறு, இறைவன் மீதுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர்களாக நாம் வாழவேண்டும்.

*“ஆண்டவரின் செயல்கள் உயர்ந்தவை; அவற்றில் இன்பம் காண்போர் அவற்றை ஆய்ந்துணர்வர்” (வச.2).*

இங்கு, ‘ஆய்ந்துணர்வர்’ என்ற சொல், கடவுளின் செயல்களை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. நாமும் முன்நாட்களை மறக்காமல் ஆய்ந்துணர்ந்து கடவுளைத் துதிக்கவேண்டும்.

**2. ஆண்டவரது உடன்படிக்கை: (வசனங்கள் 4-6)**

*“தம் வியத்தகு செயல்களை என்றும் நினைவில்நிலைக்கச் செய்துள்ளார்” (வச.4).*

கடவுள் பாஸ்கா, ஓய்வுநாள், யூபிலி போன்றவற்றை நமக்கு ஏற்படுத்தியுள்ளார். இயேசு திருமுழுக்கு மற்றும் திருவிருந்தை ஏற்படுத்தி, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (லூக்.22:19) என்று கூறிச்சென்றிருக்கிறார்.

"அருளும் இரக்கமும் உடையவர் ஆண்டவர்" (வச.4). இது யாத்.34:6ல் கடவுள் தம்மைப் பற்றி சொன்ன வார்த்தைகளை நினைவூட்டுகிறது. இஸ்ரயேல் மக்கள் மென்மேலும் தவறு செய்தபோதிலும், கடவுள் தம் உடன்படிக்கைக்கு உண்மை யாய் இருந்தார். இதையே, பவுல்:

*"நாம் உண்மையற்றவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்" (2தீமோ.2:13)*

என்று குறிப்பிடுகிறார். இஸ்ரயேல் மக்களுக்கு மன்னாவை கொடுத்த (வச.5) கடவுள்; எலியாவை காக்கைகள் மூலம் பசியாற்றிய கடவுள்; 5000 பேருக்கு உணவளித்த ஆண்டவர் இயேசு என இன்றும் இறைவன் நம் தேவைகளை நிறைவேற்ற வல்லவர்.

**3. ஆண்டவரின் செயல்கள் நம்பிக்கைக்குரியவை: (வசனங்கள்7-9)**

"அவர்தம் ஆற்றல்மிகு செயல்கள் நம்பிக்கைக்குரியவை" (வச.7). மனிதர்கள் வாக்குறுதியை மீறலாம்; ஆனால், ஆண்டவர் ஒருபோதும் தம் வார்த்தையை மீறமாட்டார் என்பதை பின்வரும் திருவசனங்களில் காண்கிறோம். "பொய்சொல்ல கடவுள் ஒரு மனிதன் அல்ல" (எண்.23:19). "புல் உலரும்; பூ வாடும்; நம் கடவுளின் சொல் என்றென்றும் நிலைத்திருக்கும்" (எசா.40:8). "வானமும் மண்ணும் ஒழிந்துபோம்; என் வார்த்தைகளோ ஒழிந்துபோகா" (மத்.24:35). "தம் மக்களுக்கு அவர் மீட்பு அளித்தார்" (வச.9). எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து இஸ்ரயேலர் பெற்ற விடுதலையை இது குறித்தாலும், முழுமையாக இயேசு கிறிஸ்துவில் இது நிறைவேறுகிறது. நம்மை கடவுள் படைத்தார் ஆனால் பாவம் நம்மை அவரிடமிருந்து பிரித்தது. இயேசுவோ, தம் இரத்தத்தால் நம்மை மீட்டு (1யோவா.1:7) கடவுள் நம்மீது அக்கறை உள்ளவர் என்பதை நிரூபித்தார்.

**4.ஆண்டவருக்கு அஞ்சுதலே ஞானத்தின் தொடக்கம்: (வசனம்.10)**

"ஆண்டவர் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (வச.10, நீதி.1:7, நீதி.9:10). உலக அறிவு மனிதனை புத்திசாலியாக்கலாம்; ஆனால், கடவுளுக்கு அஞ்சும் மனம்தான் ஞானத்தை பெறுகிறது. சாலமோன் ஞானத்தைக் கேட்டார்; அதை கடவுள் அவருக்கு அளித்தார். ஆனால் கடவுளுக்கு அஞ்சும் மனதை அவர் இழந்தபோது அவர் ஆசீர்வாதத்தை இழந்தார். நாமும் கடவுளுக்குப் பயந்து அவர்வழி நடந்து அவத் தரும் ஞானத்தை பெற்றுக்கொள்வோமாக.

**முடிவுரை:**

ஒரு சிறுமி தன் பாட்டியிடம் கேட்டாள்: "பாட்டி, ஆண்டவர் உங்களுக்கு உதவிய கதைகளை ஏன் மீண்டும் மீண்டும் சொல்கிறீர்கள்?" என்று. பாட்டி சிரித்தபடி கூறினார், "நானும் நீயும் மறந்துவிடக்கூடாது என்பதற்காக" என்று. அன்பர்களே! ஆண்டவரின் செய்கைகளை எப்பொழுதும் நினைவுகூருங்கள். சிலுவையில் மரித்து உயிர்த்து எழுந்த இயேசு கிறிஸ்துவின் அன்பை நினைவுகூருங்கள். அதனால் நமது விசுவாசம் பலப்படும், நமது நம்பிக்கை உறுதியாகும், நமது கீழ்ப்படிதல் மகிழ்ச்சியாகும். இச்சங்கீதம் 'அல்லேலூயா!' என்று தொடங்கி, 'அவரது புகழ் என்றென்றும் நிலைத்துள்ளது' என்று முடிகிறது. அப்படியே, நாமும் ஆண்டவரின் புகழுக்கு சாட்சியாய் வாழ்வோம். ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு), குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE, GLOBAL METHODIST CHURCH IN INDIA.

# வேதாகம போட்டி-189 (ஜூலை 2026 போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
2) ஏஞ்சல் C. (திலி)
3) ஏஞ்சல் டார்வின் (கன்)
4) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
5) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
6) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
7) அன்னாள் ஜெபக்கனி (கோய)
8) அனி பாய் ஜாண் (திலி)
9) அரோமா சாத்ராக் (திலி)
10) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
11) பிரீனா மேக்சின் தெபோரா (ராணி)
12) பெல்சி தங்கராஜ் (சென்)
13) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
14) பியூலா ஜேசுராஜன் (பாண்)
15) பியூலா ஜாண்ஸன் (கோய)
16) பியூலா ராஜசெல்வன் (கோய)
17) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
18) செலினா பென்ஸி வில்சன் Dr. (குவை)
19) செலினா வின்செண்ட் (திலி)
20) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
21) சந்திரலேகா (ஆபி)
22) சார்ல்ஸ் ஃபின்னி Dr. (சென்)
23) சார்லட் டேவிட் (சென்)
24) சித்ரா பெஞ்சமின் (திளு)
25) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
26) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
27) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
28) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
29) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
30) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
31) சிந்தி ஜாஷ்வா (தஞ்)
32) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
33) டேனியல் தாமஸ் (திலி)
34) டேவிட் ஜே.ஆர். (திலி)
35) டேனிங் சொர்ணா ஜெஸ் (சென்)
36) தெபோராள் D. (சென்)
37) தீபா மெர்சி கிறிஸ்டோபர்(சென்)
38) தேவகனி எமிலிசன் (சென்)
39) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
40) தேவகிருபை தங்கத்துரை (சென்)
41) தேவநேசம் ராஜாசிங் (சென்)
42) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
43) டோராபாய் ஜூலியஸ்(சென்)
44) எபெனேசர் டேனியல் (கத்)
45) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
46) எலிசபெத் செல்லத்துரை (சென்)
47) எமிமாள் மில்டன் (சென்)
48) எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா (மது)
49) எஸ்தர் டி.ஆர். (திலி)
50) எப்சிபா ஜாண் (ராணி)
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
52) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
53) ஞானஜோதி பேரின்பம் (விரு)
54) ஞானம் ஜெபராஜ் (திலி)
55) ஞானம் பிலிப் (திபூ)
56) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
57) ஞான ரோஸ் G. (திளு)
58) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
59) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
60) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
61) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
62) கிரேஸியா ஜெயபால் (சென்)
63) கிரிசெல்டா செய்லர் (சென்)
64) குணவதி ஜெபமணி (சென்)
65) ஹெலென் ஜான்சிராணி (திலி)
66) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
67) ஹெலென் திலக் (தூத்)
68) ஹெலென் I. (திளு)
69) ஹேமா அஜீத் (சென்)
70) ஹேமா கேப்ரியேல் (பெங்)
71) ஹெப்சி அசரியா (பாண்)
72) ஹிம்லா ராஜகுமாரி (சென்)

73) ஹேமலதா வில்சன் (மது)
74) இளவரசி ஜோபிதா சுந்தரராஜன் (கோய)
75) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
76) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
77) ஜமீலா செல்வராஜ் (சென்)
78) ஜமுனா K. (சென்)
79) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
80) ஜேன் தர்மராஜ் (திலி)
81) ஜான்ஸி சந்தியா (திலி)
82) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
83) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
84) ஜெபா ஜெயராஜ் (சென்)
85) ஜெபா ஜோன்ஸ் (கோய)
86) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
87) ஜெபமணி சில்வியா (தூத்)
88) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
89) ஜெபா சீனி (திலி)
90) ஜெனிலா S. (சென்)
91) ஜெரின் ஸ்டீபன் ((மும்)
92) ஜெஸி செல்லதுரை (கோய)
93) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
94) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
95) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
96) ஜெயா பாக்கியம் (தஞ்)
97) ஜெயந்திஹேனா கிறிஸ்டோபர் (அரி)
98) ஜெயசீலி மார்டின் (தூத்)
99) ஜோனா ஸ்டீபன் (சென்)
100) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
101) ஜூலியட் ஜெபா (திலி)
102) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
103) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
104) கலா கிருபாகரன் (திலி)
105) கஸ்தூரி எலியாஸ் (திலி)
106) கிருபாவதி எஸ். (சென்)
107) லதா மைகேல்ராஜ் (சென்)
108) லீலா டேவிட் (சென்)
109) லீலா ஜோஸப் (கோய)
110) லில்லி ஜாண்ஸன் (சென்)
111) லிஸி டென்சிங் (திலி)
112) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
113) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
114) மரியாள் ஜே.எஸ். (தூத்)
115) மேபா ஞான சுகி (கன்)
116) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
117) மெர்ஸி ஃபுளோரா பாஸ்கர் (வேலூ)
118) மெர்ஸி ஸ்டீபன் (சென்)
119) மெர்லின் தேவராஜ் (சென்)
120) மெர்லின் சாமுவேல் (சென்)
121) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
122) மில்காள் சாம் (சென்)
123) முத்துமாலினி அலீஸ் (கோய)
124) நேச மாலா பீட்டர் (திலி)
125) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
126) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
127) ஓலிவியா லேங்டன் (திசி)
128) பாக்யபாய் ஆரோன் (திலி)
129) பமீலா எட்வின் (கன்)
130) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
131) பொன்மணி உத்தமசிங் (சென்)
132) பிரேமா ஜானி (தென்)
133) பிரேமா ஸ்டாலின் (சென்)
134) பிரேம்குமாரி ஜெயசிங் (சென்)
135) பிரின்ஸ் தயாநிதி (சென்)
136) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
137) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
138) புனிதா ரவிநாத் (கோய)
139) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
140) ராஜபிரமீளா (திதூ)
141) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
142) ரமோலா அதிசயராஜ் (திலி)
143) ராணி ஃபுளோரா (தென்)
144) ராணி பிரபாகர் (திலி)
145) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
146) ரத்னா டென்னிஸன் (சவு)
147) ரத்னாவதி பாண்டியன் (சென்)
148) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
149) ரோஸி ஸ்டீபன் (சென்)
150) ரூபவதி நோபிள் (திலி)
151) ரூத் HAPP (திசி)
152) ரூத் ஜாண்ஸன் (திலி)

153) ரூத் நரேஷ் (திலி)
154) சலோமி மனோகர் Dr. (சென்)
155) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
156) சாரா பாலசிங் (மது)
157) சரோஜா செல்வராஜ் (சென்)
158) சரோஜினி எலிசபெத் (சென்)
159) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
160) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
161) செல்வி அமிர்தராஜ் (திளு)
162) செல்வி S. (சென்) (சென்)
163) செல்வின் S. (தூத்)
164) சாந்தி ஆல்பர்ட் (தென்)
165) சாந்தி ஜெயசீலன் (சென்)
166) சாந்தி ரோஸ் (கோய)
167) ஷர்மீளா செல்வராஜ் Dr. (கட)
168) ஷீபா செலவின் (சென்)
169) ஷீலா இஸ்ரேல் (திசி)
170) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
171) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
172) சவுந்;தரம் சாலமோன் (சென்)
173) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
174) ஸ்டெல்லா சூசைய்யா (தூத்)
175) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
176) சுகிர்தா சின்னதுரை (திலி)
177) சுஜாதா சாமுவேல் (சென்)
178) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
179) தனசீலி ஞானராஜ் (சென்)
180) தெல்மா ஸ்டேன்லி (மது)
181) உமா குளோரி (சென்)
182) உஷா ஜெபராணி SIS. H. (திளு)
183) வசந்தா அன்பன் (திலி)
184) வசந்தா சந்திரசேகர் (கோய)
185) வசந்தா துரைராஜ் (ஓஎப்டி)(திசி)
186) வசந்தா சேகர் (சென்)
187) வசந்தி கருணாகரன் (சென்)
188) வசந்தி வாசன் (சென்)
189) விஜயராணி A. (சென்)
190) விஜி டேனியல் (செங்)
191) விமலா ஜெயக்குமார் (தூத்)
192) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
193) வினோலியா பால் (மது)
194) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
195) வைலட் சைரஸ் (திலி)

## வேதாகம போட்டி-189 ஜூலை 2026 போட்டிகள் (சங்கீதங்கள் 91-120, சரியான விடைகள்)

1. இரட்சிப்பு, இரட்சிப்பு பக்-5
2. ஆண்டவர். இரட்சிப்பு பக்-7
3. அடைக்கலம்,
   கோட்டை இரட்சிப்பு பக்-19
4. தாத்தானை,
   அபிராமின் கூட்டத்தை சங்.106:17
5. பரிசுத்தவான்களின் சங். 116:15
6. மூலைக்கு தலைக்கல் சங். 118:22
7. தவறு சங். 112:4
8. சரி சங். 102:15
9. தவறு சங். 104:19
10. (ஈ) பர்வதங்கள் சங். 97:5
11. (அ) வானங்களில் சங். 103:19
12. (ஈ) சீயோனில் சங். 99:2
13. தண்;ணீர்கள் ச ங். 104:6-8
14. பாலசிங்கங்கள் சங். 104:21-22
15. யோசேப்பு சங். 105:17-22

# ‘அனைவரும் ஊழியத்தில்’

## ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. **இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழிய் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

2.**நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

3. **நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஆகஸ்டு 2026

### ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்

நாள்: 14-08-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்

நாள்: 21-08-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்

நாள்: 28-08-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி “தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க” ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================

# வேதாகம போட்டி-190 (ஆகஸ்டு 2026 போட்டிகள்)

**சங்கீதம் புத்தகம் - சங்கீதங்கள் 121 முதல் 150 வரை**

## 1-3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (பக்கம் 2,4,5,6,19)

## 4-12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

வேதவசன இருப்பிடம் - இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும்.

**பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-08-2026**

1. 'பஞ்சைப் போல் உறைந்த மழை' என்பதை சத்தியவேதம், திருவிவிலியம், பரிசுத்த பைபிள் ஆகியவை இணைத்திருமறையில் எவ்வாறு குறிப்பிடுகின்றன?

2. சங்கீதம்-121 எவ்வாறு பெயரிட்டு அழைக்கப்படுகிறது?

3. 'அல்லேலுயா' என்ற துதி-ஒலியில் தொடங்கி 'அல்லேலுயா' என்ற துதி-ஒலியில் முடியும் சங்கீதங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

4. இசைவிணைப்பான நகரமாய் கட்டப்பட்டிருக்கிறது எது?

5. கண்ணீரோடு விதைக்கிறவர்கள் எவ்வாறு அறுப்பார்கள்?

6. கர்த்தர் எவர்களைத் தாங்குகிறார்? எவர்களைத் தூக்கிவிடுகிறார்?

7. 'பொல்லாத நாவுள்ளவன் பூமியிலே நிலைப்பதில்லை' - சரியா தவறா?

8. 'மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்' - சரியா தவறா?

9. 'விசுவாசமுள்ள யாவும் கர்;த்தரை துதிப்பதாக' - சரியா தவறா?

10. வாலவயதின் குமாரர் '**இவன்**' கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பானவர்கள்:
அ) வேடன் ஆ) பலவான் இ) காவலன் ஈ) மேய்ப்பன்

11. கர்த்தரோ நீதியுள்ளவர்; துன்மார்க்கருடைய '**இவைகளை**' அவர் அறுத்தார்:
அ) கட்டுகளை ஆ) கயிறுகளை இ) கதிர்களை ஈ) விளைச்சலை

12. கர்த்தர் '**இதை**' தெரிந்துகொண்டு; அது தமக்கு வாசஸ்தலமாக விரும்பினார்:
அ) யூதாவை ஆ) எபிரோனை இ) கிருபாசனத்தை ஈ) சீயோனை

13. கோத்திரங்கள் பாத்திரமாய் தோத்தரிக்கப் போகும் ஊர்!
சாஸ்திரச் சிங்காசன நியாயாசனங்கள் உள்ள ஊர்! **இது என்ன ஊர்?**

14. குட்டட்டும் இவன் குட்டட்டும், தலைக்கு எண்ணெயாகும், குட்டட்டும்!
திட்டட்டும், இவன் திட்டட்டும், தட்டிக்கழிக்க மாட்டேன், திட்டட்டும்!
**'இவன்' யார்?... 'இவன்' யார்?**

15. கயிற்றுக் கண்ணியை மறைவாய் வைத்து கட்டிட இவர் முயல்கிறார்!
வழியில் சுருக்கு வலையை வைத்து வீழ்த்திட இவர் முயல்கிறார்!
**இவர்கள் யார்? இவர்கள் யார்?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

==========================================================================

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

தொகுப்பாசிரியர்: சகோ. சி. ஏஞ்சல்

பாகம்-86 ஆகஸ்டு 2026 எப்பிசோடு-86

# சர்வ சங்காரம் பண்ணுகிறவர்



**THE LORD WHO MAKES AN UTTER END**

Elohim Ya'Aseh Qulah

'ஏலோஹீம் யாயேஸஹ் குவாலா'

கர்த்தர் சர்வசங்காரம்பண்ணுவார்; இடுக்கம் மறுபடியும் உண்டாகாது. நாகூ.1:9பி

The Lord will make an utter end: affliction shall not rise up the second time. Nah.1:9b

சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிற இயேசுவானவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு ஆகஸ்டு மாத, சுதந்திர தின வாழ்த்துக்கள்.

ஆலயத்திற்கு ஆனந்த சத்தத்தோடே கடவுளின் சந்நிதிமுன் வந்து, உங்கள் பொருத்தனைகளைச் செலுத்துங்கள். ஏன்? தேவபிள்ளைகளுக்கு தலைவலி யாயிருந்த துஷ்டன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான் (நாகூ.1:9, 15).

**யாரையெல்லாம் சங்காரம் பண்ணுவார்?**

**சங்.143:12** பரலோகப் பணிகளைச்செய்கிற தேவமனிதர்களுடைய ஆத்துமாக்களை ஒடுக்குகிற வர்களை கிருபையினால் அழிப்பேன்.

**யோசு.11:10-12** ஆத்சோரின் சகல தீய வல்லமைகளையும், ஜெபிக்கிற தலை முறைகள் மூலம் சங்காரம்பண்ணுவேன். எந்தெந்த பட்டணங்களை ஆத்சோர் தன் ஆளுகைக்குள் வைத்திருந்ததோ அவ்விடங்களில் அதின் அதிகாரத்தையும் துரைத்தனத்தையும் வஞ்சக-செயலையும் யுத்த ஜெப-வீரர் மூலம் சங்கரிப்பேன்.

**யோசு.8:24** கர்த்தரர் நாமத்தின்நிமித்தம், வனாந்திரபாதையில் நடந்துவந்த தேவபிள்ளைகளை துரத்தின ஆயியின் பிசாசுகளை சங்கரிக்கிற வல்லமை மற்றும் வரங்களால் தேவபிள்ளைகளை நிரப்பி, மாந்திரிகம் மற்றும் பில்லிசூனியம் செய்கிற இடங்களை மண்மேடுகள் ஆக்குவேன்.

**நியா.1:12,17** கீரியாத், செப்பேர் மற்றும் கானானிய பிசாசுகளை முறிய அடித்து சங்காரம் பண்ணுகிற காலேப்புகளையும் சிமியோன்களையும் எழுப்புவேன்.

**ஜெபம்:** ஏக சக்ராதிபதியே! உம்மைப் போற்றுகிறோம். பெலிஸ்தரின் சகல மேன்மை, பலம், ஐசுவரியம், ஒற்றுமையை சங்காரம்பண்ணும்படி எங்களை அபிஷேகிப்பீராக (நியா.5:3-8). இது இயேசு ராஜாவின் செயல் என்று அறியும்படி அதிகாரத்தில் இருப்பவர்களின் மனக்கண்களைத் திறப்பீராக. இயேசுவின் நாமத்தில், பிதாவே. ஆமென்.

---

**தொகுப்பாசிரியர்: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

================================================================================



**தேன்-துளி வேத வசனக் கதைகள்**

(கதை-183 ஆகஸ்டு 2026)

ஆசிரியர்: சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

# பேராசை பிறந்தது! பிரியா நட்பு பிரிந்தது!

இங்கிலாந்து தேசத்தில் JONE, JANIE என்னும் இணைபிரியா நண்பர்கள் தங்கள் குடும்பங்களோடு, அண்டைவீடுகளில் வசித்துவந்தனர். அவர்கள் பண்ணை விவசாயம் செய்து பணக்காரர்களாய் இருந்தனர். ஒரு நாள், இருவரும் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, வீடு கட்டுவதற்காக ஆற்றுமணல் குவித்து வைக்கப் பட்டிருந்ததை கண்டனர். அதை கண்டதும் இருவரும், "இந்த ஆற்றுமணலின்மீது அமர்ந்து பேசியபடி ஓர் இரவு நேரத்தைக் கழிக்கவேண்டும்" என விருப்பம் தெரிவித்தனர். அதன்படி வானத்தில் முழுநிலவு தோன்றிய ஒரு மாலை நேரத்தில் நண்பர்கள் இருவரும் அந்த மணறகுவியல்மீது சுகமாக படுத்துக் கொண்டு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

விண்ணில் முழுநிலவைக் கண்ட JONE, "இந்த நிலா, பரப்பளவில் எவ்வளவு பெரிதாக இருக்குமோ? அவ்வளவு பெரிய புல்வெளி எனக்கு வேண்டும்" என்றான்.

இதைக் கேட்ட JANIE, "ஆஹா! வானில் எவ்வளவு நட்சத்திரங்கள் உள்ளன? அதேபோல் ஏராளமான ஆடுகள் எனக்கு வேண்டும்" என்றான்.

இதைக்கேட்டு அதிர்ந்த JONE, "அவ்வளவு ஆடுகளையும் எங்கு மேய்ப்பாய்?" என கேட்டான்?

இதைக்கேட்ட JANIE, "உன்னிடம்தான் நிலாவைப்போல் பரந்த புல்வெளி இருக்கிறதே! அவ்வளவும் என் ஆடுகளுக்குத்தான்" என பதிலளித்தான்.

உடனே JONE, "என் புல்வெளி என் ஆடுகளுக்குதான்; உன் ஆடுகளுக்கு இல்லை" என கத்தினான்.

இதைக்கேட்ட JANIE, கோபம் தலைக்கு ஏறியவனாய், "எனக்கு பயன்படாத புல்வெளி உனக்கு கிடைக்கக் கூடாது" என கூச்சலிட்டு JONEமீது பாய்ந்தான். பதிலுக்கு JONE, JANIEஐ அடித்து கீழே தள்ளினான். இவ்வாறு, இணைபிரியா நண்பர்கள் ஒருவரை ஒருவர் அடித்து காயப்படுத்திக்கொண்டு கோபத்தில்; கூச்சலிட்டவாறே தங்கள் நட்பை மறந்து பிரிந்து சென்றுவிட்டனர்.

பிரியமானவர்களே! நாம் JONE, JANIEஐ போல பேராசைக்கு இடம் கொடுக்கக்கூடாது. சிற்றின்பம் மற்றும் பேராசை, குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும். போதும் என்ற மனதுடன் கூடிய தெய்வ பக்தியுடன், தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுவோம்; ஆசீர்வாதம் பெற்று மகிழ்வுடன் வாழ்வோம். வேதம் இவ்வாறு கூறுகிறது:

பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. 1தீமோ-6:10

பொருளாசையை குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.லூக்-12:15

இருதயம் பொருளாசையை சாரக்கூடாது. சங்-119:36

பண ஆசையில்லாதவர்களாய் உங்களுக்கு இருக்கிறது போதுமென்று எண்ணுங்கள். எபி-13:5

---

M.AZARIAH GNANADOSS M.A, M.ED

EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900

==========================================================================



இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-10 பகுதி-02 எப்பிசோடு-49 ஆகஸ்டு 2026

கட்டுரை ஆசிரியர்: முனைவர். திருமதி. சலோமி மனோகர்

**10. மீண்டும் தாமஸ் கிறிஸ்தவர்கள்.**

**2. கலகம் - பிளவு, மற்றும் சமரச முயற்சிகள்.**

கலகம்-பிளவு: கிறிஸ்தவத்தில் அதிக பிளவுகளை 17ம் நூற்றாண்டு; கண்டது. இது சீர்திருத்தத்தின்; பின் விளைவுகளால் ஏற்பட்டது. 'கூனன் சிலுவை உறுதிமொழி' (1653) மூலம் தாமஸ் கிறிஸ்தவர்கள் அனைவரும் ரோமன் கத்தோலிக்க மற்றும் போர்த்துகீசிய தொடர்புக்கு எதிர்வினை ஆற்றினர். ஆனாலும், அவர்கள் அதன் உறுதியில் நிலைத்திருக்;க முடியவில்லை. ரோமன் கத்தோலிக்க தரப்பின் அழுத்தங்களால் தாமஸ் கிறிஸ்தவம் மீண்டும் பிளவுபட்டது. ஒரு குழு ரோமன் கத்தோலிக்கத்தில் இணைந்தது. மற்ற குழு இந்திய ஆர்த்தடாக்ஸ் சர்ச் ஆனது.

சீர்திருத்தம் காரணமாக ஆக்கிலிக்கனிஸம், பிரஸ்பைடிரியனிசம், காங்கிரேகேஷனலிசம் மற்றும் பாப்டிஸ்ட் பிரிவுகள் உட்பட்ட புராட்டஸ்டன்ட் பிரிவுகள் தோன்றின. பியூரிட்டனிசத்தின் எழுச்சியும், இங்கிலாந்து திருச்சபையுடனான அதன் மோதலும் மேலும் பல பிரிவினைகளுக்கு வழிவகுத்தது. மட்டுமின்றி திருச்சபையின் சடங்குகள், நிர்வாகம் மற்றும் கோட்பாடுகள் குறித்த கருத்து வேறுபாடுகள் விவாதங்களுக்கும் பிளவுகளுக்கும் வழிவகுத்தன.

**சமரச முயற்சிகள்:**

கிறிஸ்தவ பிரிவுகளிடையேயான சமரச முயற்சிகள் பல்வேறு அளவுகளில் வெற்றி பெற்றன. கி.பி.1054ம் ஆண்டில் கிழக்கு மரபுவழி மற்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபை இடையேயான பிளவுகளை சரிசெய்ய, கி.பி.1274 & கி.பி.1439ல் நடந்த சமரச முயற்சிகள் தோல்வியடைந்தன.

சீர்திருத்த காலப் பிளவுகளுக்குப்பின் கி.பி.1541ல் நடந்த ரெஜென்ஸ்பர்க் பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்தது. சீர்திருத்தம் பல்வேறு புராட்டஸ்டன்ட் பிரிவுகளின் தோற்றத்திற்கு வழி வகுத்ததோடு, கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரத்திற்கும் பெரும் சவாலாய் அமைந்தது. இறையியல் வேறுபாடுகளை சரிசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தன. புராட்டஸ்டன்டிசம், பல பகுதிகளில்; சட்டப்பூர்வ அங்கீகாரத்தை பெற்றதால் இது நிரந்தரப் பிரிவினைக்கு வழிவகுத்தது.

உதயம்பேரூர் சினாடின்கீழ் தாமஸ் கிறிஸ்தவர்கள் அடிபணிந்த பிறகு, ரோமன் கத்தோலிக்க பிஷப்பாக இருந்த பிரான்சிஸ் ரோஸ் கிறிஸ்தவர்களை ரோமானிய மயமாக்கவும் லத்தீன் மயமாக்கவும் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார். தாமஸ் திருச்சபையின் ஆர்ச்டீகன்,

பள்ளியோகம்கள் மற்றும் காத்தனர்களின் அதிகாரங்களை கிட்டத்தட்ட ஒன்றுமில்லாமல் குறைத்தார். அவரது இரண்டு வாரிசுகளான ஸ்டீபன் பிரிட்டோ (1624-1641) மற்றும் பிரான்சிஸ் கார்சியா (1641-1659) ஆயர்களின் காலத்திலும் இதுவே நடந்தது. ரோஸ் மற்றும் பிரிட்டோவின் கீழ் துன்பப்பட்ட ஆர்ச்டீகன் ஜார்ஜ், கி.பி.1640ல் இறந்தார்.

கி.பி.1590ல் அலெப்போவில் பிறந்த அஹதல்லா கி.பி.1632க்கு முன்பு மோனோபிசைட் டமாஸ்கஸ் பிஷப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். பிஷப். அஹதல்லா சூரத்-கோவா-கொச்சியைத் தவிர்த்து 1652ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மயிலாப்பூரை சென்றார். அஹதல்லாவால் இந்தியாவில் முழு நிலைமையும் மாறியது. ஜேசுவைட்கள் அவரை அன்பாக நடத்தினர். தாமஸ் கிறிஸ்தவர்களும் தங்கள் பாரம்பரிய நடைமுறைகளை மீட்டெடுப்பதற்கான ஒரு ஒப்பற்ற தலைவராக அஹதல்லாவை கருதினர்.

ஆனால், அஹதல்லாவை தங்களிடம் சேரவிடாத ரோம-போர்த்துகீசிய சூழ்ச்சியை உணர்ந்த தாமஸ் கிறிஸ்தவர்கள், மட்டஞ்சேரியிலுள்ள ‘அவர்லேடி’ தேவாலயத்தில், ‘கூனன் சிலுவை’ உறுதிமொழியை எடுத்தனர், அதில் போர்த்துகீசியர்களுக்கு ஒருபோதும் மீண்டும் அடிபணிய மாட்டோம்; என்று சபதம் செய்தனர். தாங்கள் தலைவராக்க விரும்பிய அஹதல்லாவை விட்டு தாமஸ் என்பவரை ஆர்ச் டீக்கன் ஆக்கினர். இந்த நடவடிக்கையால் உருவாக்கப்பட்டது தான் மலங்கரா சர்ச் என்ற சுயாதீன தாமஸ் கிறிஸ்தவ திருச்சபை.

**புராட்டஸ்டன்ட் சபைகளின் நல்லிணக்கத்திற்கான அடிப்படை தேவைகள்:**

- பிரிவுகளுக்கு வழிவகுத்த வரலாற்று அல்லது இறையியல் பிரச்சினைகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்தல்.
- நைசீன் விசுவாசப்பிரமாணம் மற்றும் அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்தின் முக்கியத்து வத்தை வலியுறுத்துதல்.
- எந்தப் பிரிவினரும் பூரணரல்லர், அனைவரும் தவறு செய்யக்கூடியவர்களே என்பதை வலியுறுத்தி, கிறிஸ்தவர்களிடையே பணிவு மற்றும் மன்னிக்கும் மனப்பான்மையை ஊக்குவித்தல்.
- கடந்தகால தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொணடு, பிரிவினைகளால் பாதிக்கப்பட்ட வர்களுடன் சமரசம் செய்து கொள்ளுதல்.
- மதசடங்குகளாலும் கொள்கைகளாலும் சபைகளுக்கிடையில் ஏற்படும் இடைவெளியைக் குறைக்க முயற்சி எடுத்தல்.
- இந்த அணுகுமுறைகளால் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே வரவேற்கத்தக்க நல்ல சூழலை உருவாக்க முடியும் என நம்பலாம்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD),
(POPE’S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

==========================================================================

# DETAILS ABOUT US

**OUR CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com

**OUR BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**OUR UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

UPI ID: sjddharmaraja@okhdfcbank

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

**OUR QR CODE**

Rev. Dharmaraja S.J.D

UPI ID: sjddharmaraja@okhdfcbank

Scan to pay with any UPI app

===========================================================================

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

## GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES

(GOOD SEEDS TRACTS - நல்ல விதைகள் கைப்பிரதிகள்)

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 22 வகையான நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை, கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதியின் ஒரு தொகுதியை (BATCH SPONSORSHIP) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சென்னை-93. தென்னிந்தியா.

===========================================================================
===========================================================================

# வசன தியானம்

ஆசிரியர்: Rev. S.J.D. தர்மராஜா,
ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள்,

தியானம்-172 ஆகஸ்டு 2026



## தைரியம் மற்றும் நம்பிக்கை

சங்கீதம்-121

### பயணிகளின் சங்கீதம்

கர்த்தர் உன் போக்கையும், உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்கும் காப்பார். சங்.121:8

**சங்கீதம்-121, 'பயணிகளின் சங்கீதம்' என பெயரிட்டு அழைக்கப்படுகிறது** (THE TRAVELERS' PSALM). தொலைதூரப் பயணம் எப்போதும் ஒருவித ஆபத்தை எதிர்கொள்ளும் உணர்வை நமக்கு அளிக்கிறது. குறிப்பாக, நெடுஞ்சாலைகளில் நாடு முழுவதும் வாகனத்தை ஓட்டிச் செல்லும்போது இது இன்னும் அதிகம்.

விடுமுறைப் பயணங்கள், தொழில்முறைப் பயணங்கள், போர்காலப் பயணங்கள், மிஷனரி பயணங்கள் போன்ற நீண்டதூரப் பயணங்களில் புதிய இடங்களுக்குச் செல்லும்போது, ஆறுதல் தரும் பாடலாக சங்கீதம்-121ஐ விசுவாச கூட்டத்தார் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பயன்படுத்தி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. நாமும் இந்நாட்களில் தரைவழி, கடல்வழி, வான்வழி மார்க்கங்களில் மலைகள், ஆறுகள், கடல்கள், மற்றும் மேகங்களைக் கடந்து பயணம் செய்யும் தருணங்களில் இந்த சங்கீதத்தை மீண்டும் மீண்டும் வாசித்து தியானிப்பது நமக்கு நம்பிக்கை மற்றும் தைரியத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கையே பெரும்பாலும் நமக்கு ஒரு சவாலான, ஆபத்தான பயணமாகத்தான் இருக்கிறது; நம் முன்னால் உள்ள குன்றுகளுக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பது பற்றிய தெளிவான புரிதல் நமக்கு இருப்பதில்லை. நாம் 'மலைகளுக்கு நேராக நம் கண்களை ஏறெடுக்கிறோம்' (வச.1), அந்தக் குன்றுகளைக் கடந்து செல்ல 'கர்த்தரிடமிருந்தே உதவி வருகிறது' (வச.2) என்பதை உணர்ந்து கொள்வது, கிறிஸ்துவைப் பின்பற்றும் நமக்கு நம்பிக்கையை அளிக்கும்.

கடவுள் நம் கால்களை இடற விடமாட்டார், நம் மீது கண்களை வைத்திருக்கும் அவர் உறங்கமாட்டார். பகலிலும் இரவிலும் அவர் நம்முடனிருந்து சேதங்கள் அணுகாமல் நம்மைப் பாதுகாக்கிறார்; எனவே, நாம் நிம்மதியாக இருக்கலாம். 'கர்த்தர் உங்களை எல்லாத் தீமைகளிலிருந்தும் காப்பார்.' (வச.7) 'கர்த்தர் உங்கள் போக்கையும் வரத்தையும் இதுமுதல் என்றென்றும் காப்பார்.' (வச.8). ஆகிய வசனங்கள், நமக்கு மிகுந்த ஆறுதலைத் தருவதாகும். நாம் எங்கு சென்றாலும், கடவுள் நம்மைக் கவனித்துக்கொண்டு இருக்கிறார், என்ற உண்மையை இச்சங்கீதம் எடுத்துரைக்கிறது. நாம்; பயணம் செய்யும்போதும், வாழ்வின் மலைபோன்ற சவால் களை எதிர்கொள்ளும்போதும், பயமின்றி முன்னேறிச் செல்வதற்கான நம்பிக்கை மற்றும் தைரியத்தை இச்சங்கீதத்தில் பெறுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================

# செய்தித்துளிகள் ஆகஸ்டு 2026

1.உக்ரைன் போரில் ஏற்கனவே 14,000 வடகொரிய வீரர்களை ஈடுபடுத்தியுள்ள ரஷ்யா, நவீன ட்ரோன் மற்றும் மின்னணு யுத்த முறைகளில் கைதேர்ந்த மேலும் 30,000 வடகொரிய வீரர்களை உக்ரைனுக்கு எதிராய் களமிறக்கத் திட்டம்.

2.அரியானா மாநிலம், ஜிந்த் - சோனிபட் இடையே ஜூலை 17ம் தேதி அறிமுகம் செய்யப்பட்ட இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் பயணிகள் ரயில், 10நாட்களில் 1200கி.மீ. பயணம் செய்து 3200லிட்டர் டீசலை சேமித்துள்ளதாக தகவல்.

3.ரேஷன் அட்டையிலுள்ள அனைவரின் கைரேகையையும் பதிவுசெய்யும் பணி 97% நிறை வடைந்துள்ள நிலையில், முகத்தை ஸ்கேன்செய்யும் பணி தொடங்குவதாக தமிழ்நாடு உணவுத்துறை அமைச்சர் வெங்கடரமணன் தகவல்.

4. டெல்லி மாநகரில் அறிமுகமான '24-ஸ்பீடு-போஸ்ட்' மற்றும் '48-ஸ்பீடு போஸ்ட்' ஆகிய பிரீமியம் சேவைகளை சென்னை மாநகரிலும் அறிமுகம் செய்ய 'தியேட்டர்-வேன்' பிரச்சாரம் 60நாட்கள் நடைபெறவுள்ளதாக அஞ்சல்-துறை தகவல்.

5. இம்மாதம் 15 முதல் 30ம் தேதிவரை பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தில், சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு நடத்தும் ஆண்கள் உலகக் கோப்பை ஹாக்கி போட்டிக்கான 20பேர் கொண்ட இந்திய ஹாக்கி அணி அறிவிக்கப்பட்டது.

==========================================================================================

## சுதந்திர திருநாள் 2026

## நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த இரட்சிப்பு
பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணி யாளர்கள், வலைதளப் பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்து திருச்சபை இறைமக்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளங்கனிந்த சுதந்திர-தின நல்வாழ்த்துக்கள்..



INDIA
INDEPENDENCE DAY
2026

இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்